# பாரதிதாசன் பல்கலைக்கழகம்

(தேசிய மதிப்பீட்டு தரநிர்ணயக்குழுவின் மதிப்பீட்டில் 'A+' தரச்சான்றிதழ் மூன்றாம் சுற்றில் பெற்றது)

**பல்கலைப் பேரூர், திருச்சிராப்பள்ளி–620024**


தொலைபேசி : 0431- 2407016/ 2407060
தொலை நகலி: 0431 - 2407444

**முனைவர் சு.சீனிவாசராகவன்,** எம்.ஏ., எம்.எல்.ஐ.எஸ்ஸி., பிஎச்.டி., மின்னஞ்சல் : **coe@bdu.ac.in**
தேர்வு நெறியாளர் (பொ) வலைதளம் : **www.bdu.ac.in**


---

**ந.க. எண்: முதுநிலை/நவம்பர் 2021/எழுத்துத்தேர்வுகள்/2021 நாள்: 18.10.2021**

பெறுபவர்

முதல்வர்
பல்கலைக்கழக இணைவு பெற்ற அனைத்துக் கல்லூரிகள் (தன்னாட்சி பெறாத கல்லூரிகள்)

அய்யா/அம்மையீர்,

பொருள்: முதுநிலைத் தேர்வுப் பிரிவு – நவம்பர் 2021–ல் நடைபெறவிருக்கும் பல்கலைக்கழக முதுநிலை தேர்வுகளுக்கு விண்ணப்பிக்க வேண்டிய கடைசி நாள் மற்றும் தேர்வுகள் துவங்கும் நாள் தெரிவித்தல் தொடர்பாக.

பார்வை: துணைவேந்தர் அவர்களின் ஆணை நாள்: 18.10.2021

-----------

பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் நவம்பர் 2021-ல் நடைபெறவிருக்கும் முதுநிலைத் தேர்விற்குப் பூர்த்தி செய்யப்பட்ட தேர்வு விண்ணப்பங்கள் பல்கலைக்கழகத்திற்கு வந்து சேரவேண்டிய கடைசி நாள் மற்றும் தேர்வுகள் துவங்கும் நாள் ஆகியவை கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| தேர்வுக் கட்டணங்களை / விண்ணப்பங்களை தண்டத் தொகையின்றி மாணவர்களிடம் இருந்து பெறுவதற்கான கடைசி நாள் | : | 13.11.2021<br>சனிக்கிழமை |
| தண்டத் தொகையின்றி பெறப்பட்ட கட்டணங்கள் மற்றும் இணைய வழியில் பதிவு செய்த மாணவர்களின் பட்டியல்கள் மற்றும் விண்ணப்பங்கள் பல்கலைக்கழகத்திற்கு வந்து சேர வேண்டிய கடைசி நாள் | : | 16.11.2021<br>செவ்வாய்க்கிழமை |
| தேர்வுக் கட்டணங்களை/விண்ணப்பங்களை தண்டத் தொகையுடன் (ரூ.300/- +18% GST) மாணவர்களிடம் இருந்து பெறுவதற்கான கடைசி நாள் | : | 20.11.2021<br>சனிக்கிழமை |
| தண்டத் தொகையுடன் பெறப்பட்ட கட்டணங்கள் மற்றும் இணைய வழியில் பதிவு செய்த மாணவர்களின் பட்டியல்கள் மற்றும் விண்ணப்பங்கள் பல்கலைக் கழகத்திற்கு வந்துசேர வேண்டிய கடைசி நாள் | : | 23.11.2021<br>செவ்வாய்க்கிழமை |
| **முதலாம் ஆண்டு (2021-22) மற்றும் இரண்டாம் ஆண்டு (2020-21) (முதலாம் மற்றும் மூன்றாம் பருவம்) மாணவர்கள் செலுத்திய தேர்வுக் கட்டணத்தை மட்டும் பட்டியலுடன் அனுப்பப்பட வேண்டும். தேர்வு விண்ணப்பங்களை பல்கலைக்கழகத்திற்கு அனுப்பத் தேவையில்லை.** | | |
| **முதுநிலை தேர்வுகள் துவங்கும் நாள்** | **:** | **06.12.2021**<br>**திங்கட்கிழமை** |

மேற்கண்ட தகவலை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் தெரிந்துகொள்ளும் வகையில் சுற்றறிக்கை வாயிலாகவும் கல்லூரி அறிவிப்புப் பலகையிலும் வெளியிடுமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**அனைத்து மாணவர்களும் கட்டாயம் பருவத் தேர்வுக் கட்டணத்தைச் செலுத்த வேண்டும். தேர்வுக்கட்டணம் செலுத்தத் தவறினால், அம்மாணவர்கள் மீண்டும் பயிலுதல் (Re-do) என்ற வகையில் அப்பருவத்தைப் படிக்க நேரிடும் என்று தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.**

முதுநிலைப் பாடப்பிரிவுகளுக்கான தேர்வுக் கட்டணம் செலுத்திய விவரங்களைப் பாடவாரியாக (M.A., M.Sc, M.Com., MBA, MCA and PG Diploma) என தனித்தனியான இணைப்புக் கடிதங்களுடன் அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது. இணையதளம் வழியாக செலுத்தப்பட்ட தேர்வுக்கட்டண ரசீதை (e- receipt) சுருக்கப்பட்டியலுடன் (Abstract for Examinations fee – Downloadable from University Website) கண்டிப்பாக அனுப்பப்படவேண்டும். (Form-1)

மேலும், இறுதிப்பருவத் தேர்வு எழுதும் மாணவர்கள் அனைவரும், தேர்வுக் கட்டணங்களுடன் பட்டச் சான்றிதழ்களுக்கான (Degree certificate fees) தொகை Rs.800/-யும் சேர்த்து செலுத்தி, அதற்கான விவரத்தைத் தனிப்பட்டியலாக அனுப்பிவைக்கவும்.

**மேலும், 2019-2020 கல்வியாண்டிலிருந்து சேர்க்கை பெற்ற மாணவர்கள் தேர்வு விண்ணப்பங்களை இணைய வழியில் மட்டுமே பதிவேற்றம் செய்ய அனுமதிக்கப்படுகிறது.**

**மேலும், 2019-2020 மற்றும் 2020-2021ஆம் ஆண்டுகளில் நடத்தப்படும் பாடப்பிரிவுகளுக்கு ஆண்டுவாரியாக, பல்கலைக்கழகத்தால் அனுமதிக்கப்பட்டுள்ள இடங்கள் மற்றும் கூடுதல் இடங்களின் எண்ணிக்கை குறித்தும், அவ்விடங்களில் சேர்க்கை பெற்றுள்ள மாணவர்களின் எண்ணிக்கை குறித்தும் தனித்தனியே** (M.A., M.Sc, M.Com., MBA, MCA and PG Diploma) **பாடவாரியாக பட்டியல் தயார் செய்து Abstract for Examinations fee உடன் சேர்த்து கண்டிப்பாக அனுப்பப்பட வேண்டும்.** (Form-2)

**மேலும், முந்தைய பருவத் தேர்விற்குப் பதிவு செய்ய இயலாத மாணவர்கள் குறித்து அடுத்து வரும் பருவத் தேர்விற்கு இணைய வழியில் பதிவு செய்ய பதிவாளரிடமோ / தேர்வு நெறியாளரிடமோ பெற்ற அனுமதிக் கடிதத்தின் நகலுடன் பெறப்படும் தொடர்புடைய கல்லூரி முதல்வரின் கோரிக்கையின் பேரில் பதிவு செய்ய இயலும்.**

மேற்குறித்த தேர்வுக்கட்டணம், பட்டச்சான்றிதழ்க் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளதற்கான சுருக்கப்பட்டியலுடன் அனுப்பப்படும் ரசீதில் (e-receipt) உள்ள தொகை சுருக்கப்பட்டியலுடன் நேர்செய்து அனுப்பப்பட வேண்டும் என கனிவுடன் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மேலும், கல்லூரிப் படிப்பை முடித்த (தனித்தேர்வாளர்கள்) மாணவர்கள் நிலுவைத் தாள்களுக்கான தேர்வு கட்டணங்ளை இணையதள வங்கிக் கணக்கிலேயே (online payment) செலுத்தி அதற்கான ரசீதுடன் (e-receipt) தேர்வு விண்ணப்பத்தை பூர்த்தி செய்து தேர்வுநெறியாளருக்கு அனுப்பிவைக்கவும், வங்கி வரைவோலைகளைத் (Demand Draft) தவிர்க்கவும் மாணவர்களுக்கு அறிவுறுத்த அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மீளப்பயிலுதல் (Re-do), மறுசேர்க்கை (Re-admission) மற்றும் மாற்றுச் சேர்க்கை (Transfer Admission) என்பதனைத் தேர்வுக்கட்டண சுருக்கப்பட்டியலில் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். மேற்கண்ட சேர்க்கைகளுக்காகப் பதிவாளரிடமிருந்து பெறப்பட்ட ஆணையின் நகல் மற்றும் அம்மாணவர்களின் தேர்வு விண்ணபத்தையும் இணைத்து அனுப்பும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**பல்கலைக்கழகத்திற்கு வந்து சேரவேண்டிய கடைசி நாளுக்குப் பின்னர் வரும் விண்ணப்பங்கள் எக்காரணத்தைக் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.**

மேலும், எக்காரணம் கொண்டும் முதுநிலை தேர்வுக் கட்டணத்துடன் இளநிலை தேர்வுக் கட்டணத்தை சேர்த்துச் செலுத்தக்கூடாது .

இக்கடிதம் பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புகை அளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

தங்கள் உண்மையுள்ள,

**தேர்வு நெறியாளர்**

**<u>இணைப்பு:</u> Forms 1 & 2**

**<u>குறிப்பு:</u>** பல்கலைக்கழகத் தேர்வுகள் தொடர்பான தகவல்களைப் பல்கலைக்கழக இணைய தளத்தில் (Website) பார்த்துத் தெரிந்து கொள்ளுமாறு தெரிவிக்கப்படுகிறது. (www.bdu.ac.in)